# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 31.07.2025**

**OS No. : 10/2022**

**Pw : 1**

**Name : திரு. ராஜு**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் ஒப்பந்தப்படி சொத்தினை எழுதிக்கொடுக்கவேண்டும் என கேட்டுள்ளேன். மொத்தம் 4 அயிட்ட சொத்துக்களாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதி குருசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 3ம் அயிட்ட சொத்து 2ம் பிரதிவாதியின் தகப்பனார் குருநாதனுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். 2ம் அயிட்ட சொத்து கிணறு என்றால் சரிதான். மேற்படி குருநாதன் தற்போது உயிரோடு இருக்கிறாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் குருநாதன் என்பவருடன் எந்த ஒப்பந்தமும் போட்டுக்கொள்ளவில்லை என்றால் அவரை எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியுடன் நான் எந்த அடிப்படையில் ஒப்பந்தம் போட்டேன் என்றால் அவர் செல்லில் காட்டிய ஆதாரங்களை நம்பி ஒப்பந்தம் போட்டேன். 2ம் பிரதிவாதிக்கு 3ம் அயிட்ட சொத்துக்களில் உரிமை உள்ளதா என்பதை ஆவணங்களை பார்த்து நான் உறுதி செய்தேனா என்றால் இல்லை.

தாவா சொத்துக்களுக்கு மேல்பக்கம் என்னுடைய சொத்துக்கள் அமைந்துள்ளன. எனக்கு சொந்தமான நிலங்களை நான் கிரையம் செய்ய 3ம் நபர்களிடம் 2021ல் பேசினேனா என்றால் இல்லை. 2021ம் வருடம் என்னுடைய

நிலங்கள் என்ன மதிப்பு இருக்கும் என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணத்தில் தபசில் சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் காட்டப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. எந்த வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள சொத்துக்களை பொறுத்து ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுவும் எனக்கு நினைவில்லை. வா.சா.ஆ.1 ல் உள்ள விவரங்கள் என்னால் எழுதப்படவில்லை, அதிலுள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தின் எழுத்துக்காரர் யார் என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை யார், யாருக்கு எழுதிக்கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அதில் வேறு யார் யார் கையொப்பமிட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

எதன் அடிப்படையில் பிரதிவாதிகள் எனக்கு சொத்தை கிரையம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுள்ளேன் என்றால் நான் பிரதிவாதிகளுடன் ஒப்பந்தம் போட்டுள்ளேன், முன்பணமும் கொடுத்துள்ளேன், அதன் அடிப்படையில் கேட்கிறேன். பிரதிவாதிகள் 5 ஏக்கர் 61 சென்ட் நிலத்தை விற்பனை செய்வதாக சொல்லி ஒப்பந்தம் போட்டார்கள். மொத்த கிரைய தொகை ரூ.25 லட்சம் என பேசினோம். 05.03.2021ம் தேதி மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, 31.03.2021க்குள் முடிக்கவேண்டும் என பேசி முடிவு செய்தோம். 31.03.2021ம் தேதி என் வசம் 25 லட்ச ரூபாய் பணம் இருந்தது என்பதை காட்டக்கூடிய வங்கி கணக்கு அறிக்கைகள் அல்லது வேறு ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வங்கி கணக்கு அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன். அதில் எனது கையிருப்பு 11 லட்ச ரூபாய் என குறிப்பிடப்பட்டுள்ளது, மீதி தொகை என் கைவசம் இருந்தது. நான் வழக்கை தாக்கல் செய்தபின்னர், கிரைய ஒப்பந்தப்படி முடிவான மீதி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு விசாரணைக்கு வந்தபின்னரும், மேற்படி தொகையை வைப்பீடு செய்யவில்லை

என்றால் சரிதான். நான் சொன்னதுபோல், 31.03.2021ம் தேதி என்னிடம் 11 லட்ச ரூபாய் வங்கி கணக்கில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் சொன்னதுபோல் பிரதிவாதிகள் என்னுடன் எந்த கிரைய ஒப்பந்த ஆவணமும் பிறப்பித்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமான நிலத்தை விற்பனை செய்யவேண்டும் என சொல்லி நில புரோக்கர்களிடம் கொடுத்திருந்த ஜெராக்ஸ் ஆவணங்களை பயன்படுத்தி மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளிடம் கொடுத்ததாக சொல்லும் 1 லட்சரூபாய் பணம் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டதா என்றால் அது என் கையில் இருந்த பணம் ஆகும். மேற்படி கிரைய ஒப்பந்தம், 1ம்பிரதிவாதி அருணாசலத்தின் வீட்டில் வைத்து போடப்பட்டது. நானும், உமேஸ்வரன் என்பவரும் அருணாசலத்தின் வீட்டிற்கு சென்று பேசி முடித்து அதன் பின் கிரைய ஒப்பந்தம் எழுதினோம்.

மேற்படி கிரைய ஒப்பந்தம் வெள்ளைத்தாளில் எழுதப்பட்டது, முத்திரைத்தாளில் எழுதப்படவில்லை. உமேஸ்வரன் தென்மலையை சேர்ந்தவர். நான் சொன்னதுபோல், பிரதிவாதிகளிடம் நான் எந்த ஒப்பந்தமும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றும், எந்த முன்பணமும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் நஞ்சை நிலங்கள் என்றால் சரிதான். இன்று அதன் மதிப்பு ஏக்கருக்கு 10லட்சம் இருக்குமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தபசில் சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்பதால் மோசடியாக ஆவணங்களை தயாரித்து அதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் நான் எந்த காலத்திலும் மேற்படி கிரையத்தை முடிக்க தயாராகவும், விருப்பத்துடனும் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரையம் முடிப்பதற்கான முழுத்தொகையையும் செலுத்த நான் தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

நான் என்னுடைய பெயரில் பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பெட்ரோல் பங்க் நடத்திவரவில்லை என்றும், என் தகுதியை மிகைப்படுத்திக்காட்டுவதற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்திரை வில்லையில் எழுதப்படாத ஆவணத்தின் அடிப்படையில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த காலக்கட்டத்திலும் என்னுடன் கிரைய ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லை என்றும், எனவே நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 31.03.2021க்கு பின்னர் 9 மாதங்கள் கழித்துதான் நான் பிரதிவாதிகளுக்கு கிரைய ஒப்பந்தம் முடிக்கவேண்டும் என வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். காலதாமதத்திற்கான காரணம் எதுவும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய 6 மாதங்களுக்கு பின்னர் தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணம் எதுவும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். 3ம் தபசில் சொத்தின் உரிமையாளரான குருநாதன் என்பவருடன் நான்எந்த ஒப்பந்தமும் ஏற்படுத்திக்கொள்ளாத சூழ்நிலையில் 1, 2 பிரதிவாதிகளிடம் மேற்படி பரிகாரம் கேட்க எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi